SULIT
036
Bahasa
Tamil
2005
50 minit

SET 1

JABATAN PELAJARAN NEGERI PERAK
LEARNING TO SCORE

# UJIAN PENCAPAIAN SEKOLAH RENDAH 2005

## BAHASA TAMIL / தமிழ் மொழி

Ujian Pemahaman / கருத்துணர்தல்

50 minit / நிமிடம்

**JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU**

1. இந்தப் புத்தகத்தில் **40 கேள்விகள்** இருக்கின்றன. எல்லாக் கேள்விகளுக்கும் விடையளி.

2. விடைத்தாளில் சரியான விடைக்கு ஏற்ற இடத்தைக் கருமையாக்கு.

3. கேள்விகளுக்கு விடையளிக்கும் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

   எடுத்துக்காட்டு :

   அகிலன், தன் பெயரை ________________ புத்தகத்தில் எழுதினான்.

   A. அடிக்கோலால்
   B. அழிப்பானால்
   C. பென்சிலால்
   D. வெண்கட்டியால்

   இந்த எடுத்துக்காட்டில் உள்ள கேள்விக்கான விடை **'பென்சிலால்'** என்பதாகும். இதற்கான எழுத்து **'C'** ஆகும். உன்னிடம் கொடுக்கப்பட்டுள்ள விடைத்தாளில் உள்ள எடுத்துக்காட்டைப் பார். **'C'** என்ற எழுத்திற்கான இடம் கருமையாக்கப்பட்டுள்ளது.

4. ஒரு கேள்விக்கு ஓர் இடத்தை மட்டுமே கருமையாக்க வேண்டும்.

5. விடையை நீ மாற்ற விரும்பினால், முதலில் கருமையாக்கப்பட்ட இடத்தை நன்கு அழித்துவிட வேண்டும். பின்னர், புதிய விடைக்கான இடத்தைக் கருமையாக்க வேண்டும்.

Kertas soalan ini mengandungi 14 halaman bercetak



**036** © 2005 Hak Cipta Jabatan Pelajaran Negeri Perak

LIVEWORKSHEETS

ஒவ்வொரு வினாவுக்கும் **மூன்று** அல்லது **நான்கு** விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் **மிகச் சரியான** ஒரு விடையை மட்டும் தெரிவு செய்க. பின்னர், விடைத்தாளில் அந்த விடைக்கான எழுத்து இருக்கும் இடத்தைக் கருமையாக்குக.

### பிரிவு A - செய்யுளும் மொழியணியும்
### [ கேள்விகள் 1 - 15]

1. பின்வரும் பொருளுக்கு ஏற்ற செய்யுள் எது?

| |
|---|
| நாம் பொறாமை கொண்டு பிறரைத் தூற்றிப் பேசக் கூடாது. |

A ஔவியம் பேசேல்
B ஏற்பது இகழ்ச்சி
C உடையது விளம்பேல்


2. அண்மையில் தென்கிழக்காசியாவை உலுக்கிய 'சுனாமி' என்ற பேரலையின் விளைவால் கட்டடங்கள் ________ வெனச் சரிந்தன.

A மடமட
B கிடுகிடு
C தடதட
D மளமள

3. தாய் கொஞ்சுவதைக் கண்டு குழந்தை _________என்று சிரித்தது.

A சலசல
B மளமள
C கலகல
D பளபள

4. இப்படத்திற்கு ஏற்ற செய்யுள் யாது?



A எழுத்தறிவித்தவன் இறைவனாகும்
B ஆலயம் தொழுவது சாலவும் நன்று
C தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை



LIVEWORKSHEETS

5. இப்படத்திற்கு ஏற்ற திருக்குறளைத் தெரிவு செய்க.



**காந்தி அடிகள்**

- இந்தியாவின் சுதந்திரத் தந்தை.
- மகாத்மா என்று அழைக்கப்பட்டவர்.
- வாழ்க்கை நெறிபடி வாழ்ந்தவர்.
- மக்களால் போற்றப்படுபவர்.


A செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

B தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

C வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்

D வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

6. கீழே கொடுக்கப்பட்டுள்ள சூழலுக்குப் பொருத்தமான திருக்குறள் எது?



மதியழகன் சிறப்பாகக் கல்வி கற்றுத் தேர்வில் நன்கு தேரியுள்ளான், பார்த்தாயா!

கல்வி கற்றால் மட்டும் போதுமா? இறை நம்பிக்கையும் தேவை என்பதை மறந்துவிட்டானே?



A. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

B. கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

C. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

D. தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று



LIVEWORKSHEETS

7. கீழே கொடுக்கப்பட்டுள்ள செய்யுளைப் பூர்த்தி செய்க.

ஆனமுதலில் ______I______ செலவானால்
மானம் ______II______ மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் ______III______ ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் ______IV______ நாடு

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| A | அதிகஞ் | அழிந்து | கள்ளனாய் | பொல்லனாம் |
| B | அழிந்து | அதிகஞ் | பொல்லனாம் | கள்ளனாய் |
| C | பொல்லனாம் | அதிகஞ் | அழிந்து | கள்ளனாய் |
| D | அதிகஞ் | பொல்லனாம் | கள்ளனாய் | அழிந்து |

8. கீழ்க்கண்ட கவிதை உணர்த்தும் கருத்து யாது?

உண்மை அறிவைக் கூட்டிடும் - தமிழ்
ஊக்கத்தை நெஞ்சில் ஊட்டிடும்
நன்மையில் நம்பிக்கை நாட்டிடும் - தமிழ்
நல்லார்தம் நட்பைக் கூட்டிடும்

பழக்கத்தில் பண்பை வளர்த்திடும் - தமிழ்
பயனற்றப் பழமையைப் போக்கிடும்
ஒழுக்கத்தின் சிறப்பை உணர்த்திடும் - தமிழ்
ஓதிட இனிமையை வழங்கிடும் *(கம்பார் கனிமொழி)*

A. தமிழ்மொழியால் வளரும் பண்பு
B. தமிழ்மொழியால் விளையும் நலன்
C. தமிழ்மொழியால் ஏற்படும் ஒழுக்கம்
D. தமிழ்மொழியால் உண்டாகும் பழக்கம்

9. படத்திற்குப் பொருத்தமான இணைமொழியைத் தெரிவு செய்க.




A தாயும்சேயும்
B ஆடல்பாடல்
C பேரும்புகழும்
D எலும்பும்தோலும்




LIVEWORKSHEETS

10. கீழ்க்காணும் உரையாடலுக்குப் பொருந்தும் திருக்குறள் யாது?



நேற்று நம் குளக்கரைக்கு வந்த அந்த இரு மீனவர்கள் பேசிய வார்த்தைகளை நீ கேட்டாயா?

ஆமாம். அவர்கள் நாக்கூசும் சொற்களையல்லவா பயன்படுத்திப் பேசினார்கள்!



பேசுவதற்கு எவ்வளவோ இனிய சொற்கள் இருக்கும்போது அவர்கள் ஏன் முறையற்ற சொற்களைப் பயன்படுத்த வேண்டும்?

A அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்

B இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

C யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

D எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

கேள்விகள் 11 - 12 பொருத்தமான மரபுத்தொடரைக் கொண்டு நிறைவு செய்க.

எந்த வேலையையும் ____11____ செய்யாமல் நிதானமாகச் செய்ய வேண்டும் என்று எத்தனை முறை உன்னிடம் கூறிவிட்டேன்.



மன்னித்து விடுங்கள் ஐயா. இனிமேல் என் வேலையை ____12____ இறுதி நேரத்தில் அவசர அவசரமாகச் செய்யமாட்டேன்.


11. A அவரச குடுக்கையாகச்
B கண்ணும் கருத்துமாகச்
C கடுக்காய் கொடுத்துச்
D ஆழம் பார்த்துச்

12. A கரைத்துக் குடித்து
B ஒரு கை பார்த்து
C ஆறப் போட்டு
D தட்டிக் கழித்து



LIVEWORKSHEETS

13. படத்திற்குப் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க.



**வாகை சூட வயது ஒரு தடையல்ல !**

72 கிலோ மீட்டர் ஓடிய குமுதா.

A ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?
B மனம் உண்டானால் மார்க்கம் உண்டு
C. விளையும் பயிர் முளையிலே தெரியும்
D இளங்கன்று பயம் அறியாது

14. கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் தவறான விளக்கத்தைக் கொண்டுள்ள பழமொழி எது ?

| | | |
|---|---|---|
| A | சிறுகக் கட்டிப் பெருக வாழ் | சிறுகச் சிறுகச் சேமித்துப் பெருமைபட வாழ வேண்டும். |
| B | ஒன்று பட்டால் உண்டு வாழ்வு | எல்லாரும் ஒன்றிணைந்து ஒருமித்த கருத்தோடு செயல்பட்டால் நல்வாழ்வு அமையும். |
| C | ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ? | எதையும் இளமையில் எளிதாகவும் விரைந்தும் கற்றுக் கொள்ளலாம், முதுமையில் அவ்வாறு செய்ய இயலாது. |
| D | சிறு துரும்பும் பல் குத்த உதவும் | திறமைசாலி அற்பப் பொருளையும் கொண்டு தன் ஆற்றலால் ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்வான். |

15. படத்திற்குப் பொருத்தமான உவமைத் தொடரைத் தெரிவு செய்க.



A அனலில் இட்ட புழு போல
B சூரியனைக் கண்ட பனி போல
C பசுத் தோல் போர்த்திய புலி போல
D யானை வாயில் அகப்பட்ட கரும்பு போல



LIVEWORKSHEETS

## பிரிவு B - இலக்கணம்
## [ கேள்விகள் 16 - 30 ]

16. குணவேந்தன் தமிழ் வாழ்த்துப் பாடலைப்_______________அவையோர் எழுந்து நின்றனர்.

A பாடி
B பாட
C பாடிய
D பாடும்

17. வாக்கியத்திலுள்ள நிகழ்கால வினைமுற்றுக்கு ஏற்ற இறந்தகால வினைமுற்று எது ?

| |
|---|
| தென்னரசி கனடாவில் சட்டம் பயில்கிறாள் . |

A பயின்றாள்
B பயின்றிலள்
C பயிலுவாள்
D பயில்கின்றாள்

18. இந்தியர்களிடையே தற்போது விழிப்புணர்வை ஏற்படுத்தும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் 'வாழ்க்கைக் கல்வி' எனும் நிகழ்ச்சியும் ஒன்றாகும். ___________ ஒவ்வொருவரும் இந்நிகழ்ச்சியைப் பார்க்க வேண்டும்.

I எனவே
II ஆனால்
III ஆகவே
IV ஏனென்றால்

A I, II
B I, III
C II, IV
D III, IV

19. கனிமொழி பரத நாட்டியம் பயில ஆர்வம் கொண்டாள். _____________ பயிற்சிக்காகப் பல மணி நேரத்தைச் செலவிட்டாள். ________________ அவளால் சிறப்பாக ஆட முடியவில்லை.

A ஆகவே, அதனால்
B அதனால், எனினும்
C எனவே, இருப்பினும்
D ஏனென்றால், ஆனால்



LIVEWORKSHEETS

20. குன்றிய வினை வருகின்ற விடையைத் தெரிவு செய்க.

I பூமாலை தொடுத்தாள்
II பானை உடைந்தது
III எழுத்தாளர் பேசினார்
IV அரவம் தீண்டியது

A I, II, III
B II, III, IV
C I, III, IV
D I, II, IV

21. உயர்திணையைக் காட்டும் இணை எது ?

| | | |
|---|---|---|
| A | ஆடுகள் | மேய்கின்றன |
| B | பாலன் | சாப்பிட்டது |
| C | சிறுவர்கள் | விளையாடினர் |
| D | மான் | ஓடியது |

22. சரியான வரிசையைத் தெரிவு செய்க.

| | **குணப்பெயர்** | **காலப்பெயர்** | **இடப்பெயர்** |
|---|---|---|---|
| A | கோபம் | செவுள் | நேற்று |
| B | தேடுதல் | கடிகாரம் | துறைமுகம் |
| C | கோபம் | நேற்று | துறைமுகம் |
| D | கடிகாரம் | நேற்று | தேடுதல் |

23. தமிழ்ப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருவது, தமிழ்மக்களுக்குத் தமிழ்ப்பற்று உள்ளது என்பதையும் தமிழ்மொழி வளர்கிறது என்பதையும் அடையாளம் காட்டுகிறது.

A. தமிழ்ப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
தமிழ்மக்களுக்குத் தமிழ்ப்பற்று உள்ளது என்பதை அடையாளம் காட்டுகிறது.
தமிழ்மொழி வளர்கிறது என்பதை அடையாளம் காட்டுகிறது.

B. தமிழ்ப்பள்ளி மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
தமிழ்மக்களின் தமிழ்ப்பற்று வளர்கிறது.
தமிழ்மொழி வளர்கிறது என்பதை அடையாளம் காட்டுகிறது.

C. தமிழ்ப்பள்ளி மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
தமிழ்மக்களிடத்தில் தமிழ்ப்பற்று வருகிறது.
தமிழ்மொழி வளர்வதற்கு அடையாளம்.




LIVEWORKSHEETS

24. பின்வரும் வாக்கியங்களுள் எதில் செயப்படுபொருள் இல்லை?

A. பாலன் வெந்நீரில் குளித்தான்.
B. பாலன் காலைச் சிற்றுண்டி உண்டான்.
C. பாலன் ஆரஞ்சுப் பழச்சாறு குடித்தான்.
D. பாலன் வீட்டுப்பாடம் செய்து முடித்தான்.

25. கீழே உள்ள கூற்றுக்கு ஏற்ற செயப்பாட்டுவினை வாக்கியத்தைக் கூறியவர் யார்?

**முகுந்தன் ஓவியம் வரைந்தான்.**




A. பாலன்
B. வேலன்
C. நகுலன்

26. மிகச் சரியான இணை எது ?

| | **ஒன்றன் பால்** | **பலவின் பால்** | **பலர் பால்** |
|---|---|---|---|
| A | சிறுமி | குருவிகள் | மாணவர்கள் |
| B | பூனை | பெரியவர்கள் | சிங்கங்கள் |
| C | குழந்தை | வீரர்கள் | பாம்புகள் |
| D | எலி | வாத்துகள் | இளைஞர்கள் |



LIVEWORKSHEETS